இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

ஞாயிற்றுக்கிழமை 22-12-2024

# அம்பேத்கரை உச்சரிக்க அருகதை உண்டா ?

‘அண்ணல் அம்பேத்கரை காங்கிரஸ் கட்சி மதிக்கவில்லை, புறக்கணித்தது’ என்று பிரதமர் மோடியும், உள்துறை அமைச்சர் அமித்ஷாவும் சொல்கிறார்களே, இவர்களுக்கு அம்பேத்கரை உச்சரிக்க அருகதை உண்டா?

2014 ஆட்சிக்கு வந்தபிறகு அரசியல் லாபங்களுக்காக அம்பேத்கரை உச்சரித்தார்களே தவிர, அதற்கு முன்னதாக அண்ணலுக்கும் இவர்களுக்கும் என்ன தொடர்புகள் இருந்தது?

2017 ஆம் ஆண்டு அம்பேத்கரின் பேரன் ஆனந்த் தெல்தும்டேவைக் கைது செய்தது பா.ஜ.க. அரசு அல்லவா?

அண்ணலைக் கொச்சைப்படுத்தி அருண்சோரி புத்தகம் எழுதிய போது இவர்கள் எங்கே போனார்கள்? Worshipping False Gods – Ambedkar, and the facts which have been Erased – என்பது அருண்சோரி எழுதிய நூல். ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் சிந்தனையாளர் குழுவில் இருந்தவர் இவர். பா.ஜ.க. அமைச்சரவையில் அமைச்சராக இருந்தவர். “பிரிட்டிஷ் ஆட்சிக்கு ஆதரவாளராக இருந்த அம்பேத்கர், விடுதலைப் போராட்டத்தில் ஈடுபடவில்லை” என்று அதில் அருண்சோரி எழுதினார். இந்த நூலுக்கு நாடுமுழுவதும் கடும் எதிர்ப்புகள் வந்த போது, இப்புத்தகத்திற்குத் தடை ஏற்படுத்தும் சூழல் ஏற்பட்டது. அதைத் தடை செய்யக் கூடாது என்று சொன்னவர்கள் ஆர்.எஸ்.எஸ். – பா.ஜ.க. ஆட்கள்.

**‘இராமனும் கிருஷ்ணனும் ஓர் புதிர்’ என்பது அம்பேத்கர் எழுதிய நூல் ஆகும். அந்த நூலைத் தீக்கிரையாக்கி அதனைத் தடை செய்ய வேண்டும் என்று போராடியது ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. அமைப்பினர்தான் என்பது மறந்து போய்விட்டதா?**

**மராத்வாடா பல்கலைக் கழகத்துக்கு அம்பேத்கர் பெயரை வைப்பதற்கு எதிராக 1994 ஆம் ஆண்டு மகாராஷ்டிரா மாநிலத்தில் போராடியவர்களில் அதிகம் இவர்கள்தானே என்பதை மறக்க முடியுமா? அம்பேத்கரின் சிலைகள் அவமானப்படுத்தப்பட்டனவே? தலித் மக்கள் தாக்கப்பட்டார்களே?**

குஜராத் மாநிலத்தில் இடஒதுக்கீட்டுக்கு எதிராக உயர் வகுப்பினர் 1980 ஆம் ஆண்டு போராட்டம் நடத்தினார்கள். அப்போதும் அம்பேத்கர் சிலைகள்தான் சேதப்படுத்தப்பட்டன.

**ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் தலைவராக சுதர்சன் பொறுப்பேற்ற போது, “இந்திய அரசியலமைப்புச் சட்டம் இந்துக்களுக்கு விரோதமானது. மேற்கத்தியக் கொள்கைகளின் அடிப்படையில் அது உருவாக்கப்பட்டது. ஆகையால் நாம் அதை புறந்தள்ளிவிட்டு, புதிய அரசியலமைப்புச் சட்டத்தை எழுத வேண்டும்” என்று சொன்னார். அம்பேத்கரை இழிவுபடுத்தும் செயல் அல்லவா இது?**

சமூக நீதியை உருவாக்க ‘சமூகத்திலும், பொருளாதாரத்திலும் பின் தங்கிய’ மக்களுக்கு இடஒதுக்கீடு வழங்குவதை முதல் அரசியலமைப்புச் சட்டத் திருத்தமானது 1951ஆம் ஆண்டு ஏற்றுக் கொண்டது. இதனைச் செயல்படுத்திக் கொடுத்தவர் அன்றைய பிரதமர் நேரு அவர்கள். ஆனால், ‘பொருளாதார அளவுகோல் வேண்டும்’ என்று அப்போது சொன்னவர் இந்து மகாசபை உறுப்பினரான சியாம பிரசாத் முகர்ஜி. இந்தத் திருத்தத்தை பிரதமர் நேருவும், சட்ட அமைச்சர் அம்பேத்கரும் நிராகரித்தார்கள். இதுதொடர்பாக வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று சொன்னவர் சியாம பிரசாத் முகர்ஜி. இவரது திருத்தத்துக்கு ஆதரவாக 5 வாக்குகள் மட்டுமே இந்திய நாடாளுமன்றத்தில் கிடைத்தது.

**பட்டியலினத்தவருக்கு பத்து ஆண்டுகள் மட்டுமே இட ஒதுக்கீடு வழங்க வேண்டும், அப்படிச் செய்தால்தான் அவர்கள் மட்டுமே சலுகைகள் அனுபவிக்கிறார்கள் என்று மற்றவர்களுக்கு இருக்கும் உறுத்தல் பறந்து போகும் என்று சொன்னவர் ஆர்.எஸ்.எஸ். தலைவரான கோல்வால்க்கர்.**

**சமூகநீதிக்கும், இடஒதுக்கீட்டுக்கும் எதிரானவர்களாக இவர்கள் இருந்ததால்தான் மண்டல் பரிந்துரைகளை ஏற்றுக் கொண்ட பிரதமர் வி.பி.சிங் ஆட்சியைக் கவிழ்த்தார்கள்.**

பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு மத்திய அரசுப் பணிகளில் 27 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்கப்படும் என்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க அறிவிப்பை 7.8.1990 அன்று பிரதமர் வி.பி.சிங் வெளியிட்டார். அப்போது டெல்லி ஆர்.எஸ்.எஸ். தலைமையகத்தில் ஒரு கூட்டம் நடந்தது. அப்போதைய பா.ஜ.க. தலைவர் முரளி மனோகர் ஜோஷி அதில் கலந்து கொண்டார். அன்றைய தேசிய முன்னணி அரசுக்கு வெளியில் இருந்து பா.ஜ.க. ஆதரவு தெரிவித்து வந்தது. அந்த ஆதரவை வாபஸ் வாங்க வேண்டும் என்று அக்கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

‘மண்டல்’-ஐ வைத்து பிரதமர் வி.பி.சிங் ஆட்சியைக் கவிழ்த்தால் பிற்படுத்தப்பட்டோர் எதிர்ப்பு வந்துவிடும் என்பதால் ராமர் கோவில் கட்ட யாத்திரை கிளம்பினார்கள். இதுதொடர்பான பா.ஜ.க.வின் தேசியக் குழுக் கூட்டத்தில் (1990 செப்டம்பர் 14) வி.எச்.பி.தலைவர் அசோக் சிங்கால் சிறப்பு அழைப்பாளராக வரவழைக்கப்பட்டார்.

மண்டல் தொடர்பான அறிவிப்பு ஆகஸ்ட் மாதம் வந்தது. கோவில் பிரச்சினையை செப்டம்பர் மாதம் கிளப்பினார்கள். “அத்வானியின் ரத யாத்திரையை அனுமதிக்க முடியாது” என்றார் பிரதமர் வி.பி.சிங். அத்வானியின் ரத யாத்திரை பீகாருக்குள் நுழைந்ததும் அதனைத் தடை செய்து அத்வானியைக் கைது செய்தார் அன்றைய பீகார் மாநில முதலமைச்சர் லாலு பிரசாத். (இன்று வரை லாலு பிரசாத், பா.ஜ.க. தலைமையால் தொடர்ந்து தொல்லைக்கு உள்ளாக்கப்படுவது இதனால்தான்) இதற்காகத்தான் காத்திருந்தது பா.ஜ.க. உடனடியாக பிரதமர் வி.பி.சிங் அரசுக்கு நெருக்கடி கொடுத்தது. நவம்பர் 7 ஆம் நாள் பதவி விலகினார் வி.பி.சிங்.

**ஆகஸ்ட் மாதம் அறிவிக்கப்பட்ட சமூகநீதியை, நவம்பர் மாதத்தில் நாசம் செய்தவர்கள்தான் இன்றைக்கு சமூகநீதியைப் பற்றியும், அம்பேத்கரைப் பற்றியும் பேசுகிறார்கள்.**

**இதன் காரணமாக உயர்ஜாதி - உயர் வர்க்க கட்சி என்ற அடையாளம் பா.ஜ.க.வுக்கு ஏற்பட்டது. அதனைத் துடைக்க மெதுவாக அம்பேத்கரைச் சொல்லத் தொடங்கினார்கள். அம்பேத்கரை நீண்ட காலத்துக்கு எதிர்க்க முடியாது என்ற நிலைமை வந்ததும், அம்பேத்கரை கபளீகரம் செய்ய பா.ஜ.க. முயற்சித்தது. பட்டியலினத்தவரை ஈர்க்கும் தந்திரமாகவும் பயன்படுத்தினார்கள். ‘இந்துத்துவ’ அம்பேத்கராக அவரைக் காட்ட முயற்சித்தார்கள். அவருக்கு காவிச் சாயம் பூச முயற்சித்தார்கள்.**

‘படேலுக்கு எதிரானது காங்கிரஸ், அம்பேத்கருக்கு எதிரானது காங்கிரஸ்’ என்று புனைவு வரலாறுகளின் மூலமாக நிகழ்கால உண்மைகளை மறைத்துக் கொண்டிருக்கிறது பா.ஜ.க. இந்தியாவுக்கு, இந்திய மக்களுக்கு, இந்திய அரசியலமைப்புச் சட்டத்துக்கு எதிரானது அல்லவா பா.ஜ.க.?

●●

## 25 ஆண்டுகள் நிறைவு: குமரியில் முத்தமிழ் வித்தகர் கலைஞர் அமைத்த

# அய்யன் திருவள்ளுவர் சிலையை ‘பேரறிவுச் சிலை’ யாகக் கொண்டாடுவோம்!

## தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழாரம்!

சென்னை, டிச. 22-


குமரிக் கடல் எல்லையில் அய்யன் வள்ளுவருக்கு முத்தமிழறிஞர் கலைஞர் சிலை அமைத்து வெள்ளி விழா ஆண்டாக 25 ஆண்டுகள் நிறைவு பெற்றதையொட்டி கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள சமூக வலைதளப்பதிவில், முத்தமிழ் வித்தகர் கலைஞர் அவர்களால் மூப்பிலாத் தமிழில் முப்பால் படைத்த அய்யன் திருவள்ளுவருக்கு அமைத்த சிலையை ‘பேரறிவுச் சிலை’யாகக் கொண்டாடுவோம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

*முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் கன்னியாகுமரியில் அய்யன் வள்ளுவர் சிலை அமைக்கப்பட்டு 25 ஆண்டுகள் ஆவதையொட்டி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு*

**சமத்துவம் போற்றும் உலகப் பொதுமறை படைத்த அய்யன் வள்ளுவருக்கு, நமது நாடு தொடங்கும் குமரி எல்லையில் வானுயரச் சிலை அமைத்து ஆண்டுகள் ஆகிறது 25!**

**மூப்பிலாத் தமிழில் முப்பால் படைத்த அய்யன் திருவள்ளுவருக்கு முத்தமிழ் வித்தகர் கலைஞர் அமைத்த சிலையை “பேரறிவுச் சிலை” ஆகக்** (Statue of Wisdom) **கொண்டாடுவோம்!**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.




## ஈரோடு கிழக்குத் தொகுதி ‘இந்தியா’ கூட்டணி வசமாகும்!

# 2026 சட்டமன்றத் தேர்தலில் 200 தொகுதிகளையும் தி.மு.க. கூட்டணி தாண்டிவிடும்!

## ‘ஈரோடு கள ஆய்வில் நான் உணர்ந்த உணர்வு’ என்று கோவையில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!

**கோவை, டிச.22-**

**கோவையில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில், 2026 சட்டமன்றத் தேர்தலில் 200 என்ற இலக்கை நாங்கள் வைத்திருந்தோம். ஈரோடு கள ஆய்வில் நான் உணர்ந்த உணர்வு என்ன என்று கேட்டால் 200யையும் தாண்டி விடுமோ? என்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டிருக்கிறது என்று கோவையில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20.12.2024) கோயம்புத்தூரில் செய்தியாளர்களை சந்தித்து அளித்த பேட்டி வருமாறு:-**

கடந்த சில நாட்களுக்கு முன்பு நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் இரா. மோகன் அவர்கள் மறைவெய்தினார். அந்த நேரத்தில் நான் அவருக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து செய்தி வெளியிட்டிருந்தேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தில் சாதாரண நகர கழக செயலாளராக இருந்து சட்டமன்ற உறுப்பினராக, நாடாளுமன்ற உறுப்பினராக பணியாற்றி, கழகத்திற்கு பெருமை சேர்த்தவர். அவரது மறைவு என்பது கோவை மாவட்டத்திற்கு மட்டுமல்ல, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் மாபெரும் இழப்பாக உள்ளது. எனவே, அவர் இறந்த துயரத்தில் இருக்கக்கூடிய அவருடைய குடும்பத்தை சார்ந்தவருக்கு ஆறுதல் சொல்வதற்காக நான் இங்கு வந்தேன். அவரை இழந்து வாடும் குடும்பத்தினருக்கும், இந்த வட்டாரத்தில் இருக்கும் திராவிட முன்னேற்றக் கழக தோழர்களுக்கும் என்னுடைய ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கின்றேன்.

**2026 சட்டமன்றத் தேர்தலில்**
**200 தொகுதிகளில் வெற்றி இலக்கு!**

**கேள்வி:** ஈரோடு கள ஆய்விற்கு சென்று வந்துள்ளீர்கள். மக்கள் என்ன சொன்னார்கள். அது பற்றி?

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பதில்:** நேற்றைய தினம் ஈரோட்டில் கள ஆய்வு நடத்தினேன். கள ஆய்வினை பொறுத்தவரையில், இன்னும் வேகமாக உற்சாகத்தோடு பணியாற்றி வருகிறார்கள். வரக்கூடிய 2026 சட்டமன்றத் தேர்தலில் 200 என்ற இலக்கை நாங்கள் வைத்திருக்கிறோம். ஈரோடு கள ஆய்வில் நான் உணர்ந்த உணர்வு என்ன என்று கேட்டால், 200யையும் தாண்டி விடுமோ என்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டிருக்கிறது.

**கேள்வி:** ராகுல் காந்தியின் மீது வழக்கு பதிவிட்டிருப்பது தொடர்பாக......

**முதலமைச்சர் பதில்:** அதை சட்டப்படியாக சந்திப்பார்.

**கேள்வி:** ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் தி.மு.க. வசமாகுமா?

**முதலமைச்சர் பதில்:** தி.மு.க. கூட்டணி வசமாகும். ஏற்கனவே இந்தியா கூட்டணியில் தி.மு.க. அங்கம் வகிக்கிறது. எனவே இந்தியா கூட்டணியின் வசமாகும்.

**ஒரே நாடு ஒரே தேர்தல்**
**கொடுமையான முடிவு!**

**கேள்வி:** ஈரோடு கிழக்கு தொகுதி மீண்டும் காங்கிரசுக்கு ஒதுக்கப்படுமா?

**முதலமைச்சர் பதில்:** அதை முறையாக அவர்களுடன் கலந்து பேசி முடிவெடுத்து அறிவிப்போம்.

**கேள்வி:** ஒரே நாடு, ஒரே தேர்தல் பற்றி?

**முதலமைச்சர் பதில்:** அதைபற்றி பல முறை சொல்லியிருக்கிறேன். அது கொடுமையான ஒரு முடிவு, ஒரே நாடு, ஒரே தேர்தல் என்பது ஜனநாயகத்தை படுகுழியில் தள்ளக்கூடிய மோசமான செயலாகும்.

**அமித்ஷா விவகாரம்: கூட்டணிக் கட்சித்**
**தலைவர்களுடன் ஆலோசித்து**
**முடிவு அறிவிப்போம்!**

**கேள்வி:** அமித்ஷா – அம்பேத்கர் விவகாரம் தொடர்பாக அடுத்து எந்த மாதிரி அணுகபோகிறோம். தொடர் போராட்டங்கள் நடந்துகொண்டிருக்கும் நிலையில், எந்த மாதிரியான எதிர்ப்புகள் தெரிவிக்கப்போகிறோம்? அது பற்றி?

**முதலமைச்சர் பதில்:** இந்தியா கூட்டணிக் கட்சித் தலைவர்களுடன் ஆலோசித்து அது குறித்து அறிவிப்போம்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தார்.

## அரசியல் உள்நோக்கத்தோடு நெருக்கடி – துணைவேந்தர் பதவிகளை நிரப்புவதில் அரசியல் செய்யாதீர்!

# பல்கலைக்கழகங்களை கல்விப் பணியாற்ற ஆளுநர் வழிவிட வேண்டும்!

## உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் அறிக்கை!

**சென்னை, டிச.22-**

**துணைவேந்தர் பதவிகளை நிரப்புவதில் அரசியல் செய்வதை விடுத்து பல்கலைக்கழகங்கள் கல்விப் பணியாற்ற ஆளுநர் வழி விட வேண்டும் என்று உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி செழியன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.**

இதுகுறித்து அமைச்சர் கோவி. செழியன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-



பல்கலைக்கழக துணைவேந்தர் காலியிடங்களை நிரப்பி நிர்வாகத்தை செம்மைப்படுத்த ஆளுநர் அவர்கள் மீண்டும் மீண்டும் தமிழ்நாடு அரசுக்கு முட்டுக்கட்டை போட்டுக் கொண்டு, ஏற்கனவே தெரிவித்த செய்தியையே திரும்ப தேதியை மாற்றி இன்று அறிக்கை வெளியிட்டு உள்ளது மிகவும் வேதனையளிக்கிறது. பல்கலைக்கழக நிதி நல்கை குழு தலைவரின் நியமன உறுப்பினரை “துணை வேந்தர் தேடுதல் குழுவில்” சேர்ப்பது இவருடைய உள்நோக்கமாக உள்ளது மட்டுமே தெரிகிறதே தவிர, வேறு புதிய தகவல்கள் ஏதுமில்லை.

**அரசியல் நெருக்கடி!**

மாநில அரசால் ஏற்கனவே சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டத்தில் உள்ள சரத்துகளுக்கு உட்பட்டே பல்கலைக்கழக நிதி நல்கை குழுவின் நெறிமுறைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அப்போதே தேடுதல் குழு அமைக்க சார்ந்த பல்கலைக்கழக சட்டத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் என தெளிவாக அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அந்த ஆணை படியே தற்போது துணைவேந்தருக்கான தேடுதல் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. பல்கலைக்கழக நிதி நல்கை குழுவின் நெறிமுறைகள் பரிந்துரை மட்டுமே. அதை அப்படியே கட்டாயம் மாநில அரசுகள் பின்பற்றப்பட வேண்டும் என்று மாநில அரசுகளை நிர்ப்பந்தப்படுத்துவது மக்களால் தேர்ந்தெடுத்த அரசுக்கு அரசியல் உள்நோக்கோடு கொடுக்கும் நெருக்கடி ஆகும். இதனை ஆளுநர் தவிர்த்து பல்கலைக்கழகங்கள் கல்விப்பணியாற்ற வழிவிட வேண்டும்.

பல்கலைக்கழகங்களுக்கு மாநில ஆளுநர் வேந்தராக இருப்பதை காரணம் காட்டி பல்கலைக்கழகங்களின் செயல்பாடுகளில் தேவையற்ற வகையில் மூக்கை நுழைப்பது போன்ற ஆளுநரின் நடவடிக்கைகளுக்கு நீதிமன்றம் ஏற்கனவே பலமுறை குட்டு வைத்தும் தனது செய்கையினை மாற்றிக்கொள்ளவில்லை என்பது கவலைக்குரியது மட்டுமல்ல ஆளுநரின் அதிகார வரம்பிற்கு அப்பாற்பட்டதும் ஆகும். இவ்வாறு ஆளுநர் தொடர்ந்து தலையிட்டு வருவதால் பல பல்கலைக் கழகங்களின் நிர்வாகம் கடுமையாக பாதிப்படைந்துள்ளது. மாணவர்களின் எதிர்காலமும் கேள்விக்குறி ஆகிவிடுமோ என்ற அச்சம் நமக்கு ஏற்படுகிறது.

**ஆளுநரின் தலையீடு!**

ஒவ்வொரு ஆண்டும் மாநில பல்கலைக்கழகங்களுக்கு வழங்கப்படும் நிதியினை ஒன்றிய அரசு நிறுத்தியும் குறைத்தும் வருகிறது. இதனால் பல பல்கலைக்கழகங்களின் நிதி நிலைமை மிகுந்த சிரமத்திற்கு ஆளாக்கப்பட்டுள்ளது. இதனை பல்கலைக்கழகத்தின் வேந்தர் என்ற பொறுப்பில் உள்ள ஆளுநர் தட்டிக் கேட்பதில்லை. நிதி ஒதுக்கீடு செய்யாமல் பல்கலைக்கழகங்களை முடக்கும் ஒன்றிய அரசின் செயல்பாட்டை மறைக்கவே பல்கலைக்கழக நிர்வாகத்தில் ஆளுநர் இப்படி அரசியல் செய்கிறார் என்பது அப்பட்டமாக தெரிகிறது. நிர்வாக குளறுபடிகளுக்கு காரணமான தனது செயல்களை ஆளுநர் இனியாவது நிறுத்தி தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சிக்கு தனது பங்களிப்பை அளிக்க முன்வர வேண்டும். பல்கலைக்கழக மானியக் குழுவின் பிரதிநிதியை நியமிக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தும் ஆளுநர், முடிந்தால் பல்கலைக்கழக மானியக்குழுவிடம் அதிக நிதியை தமிழ்நாட்டிற்கு பல்கலைக்கழகங்களுக்கு பெற்றுத் தரலாமே.

**சட்ட ரீதியாக**
**எதிர்கொள்வோம்!**

மொழி உரிமை, கல்வி உரிமை போராட்டங்களை கண்ட தமிழ்நாட்டில் ஆளுநர் தனது சாய அரசியலை கைவிட வேண்டும். இப்பிரச்சினையை தமிழ்நாடு அரசுமுறையாக, சட்டரீதியாக எதிர்கொள்ளும் என தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு உயர் கல்வித்துறை அமைச்சர் கோவி. செழியன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.